# பனைமரச் சிறப்பு

## நான்காம் வகுப்பு

## பாட எண் - 2

**TA5121**

<u>பாடநோக்கங்கள் :</u>

பாடமுடிவில் மாணவர்கள் ,

- தங்கு தடையின்றிப் பேசும் திறனைப் பெறுவர்.
- தேசிய / மாநில அளவிலான சமூக ,உணர்வுப் பூர்வமான செய்திகளை இனங்கண்டு அவற்றின் மீது கருத்தாடல் செய்வர்.
- புதுச்சேரி அரசின் மாநிலச் சின்னங்களை அறிவர்.
- பனைசார் சொற்களை அறிந்து சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்வர் .
- வகுப்பறைக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் திறனைப் பெறுவர்.
- பல்வேறு மரங்களின் பாகங்களையும், அவற்றின் பயன்களையும் அறிந்துகொள்ளும் அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வர்.

<u>பாட ஆயத்தம் : முன்னறிவைச் சோதித்தல்</u>

**ஆசிரியர்** : நீங்கள் என்னென்ன பழங்களை எல்லாம் சாப்பிட்டுள்ளீர்கள் / சுவைத்துள்ளீர்கள் ?

**மாணவர்கள்** : மாம்பழம் ,வாழைப்பழம் ,கொய்யாப்பழம் ,நாவற்பழம்.

**ஆசிரியர்** : இந்தப் பழங்கள் எல்லாம் நமக்கு எங்கிருந்து கிடைக்கின்றன ?

**மாணவர்கள்** : மாமரம் ,ஆப்பிள் மரம் ,வாழை மரம் ,கொய்யா மரம் .

***<u>(மாணவர்கள் பதில்களைக் கூறும் பொழுது உடனுக்குடன் ஆசிரியர் பழங்கள் மற்றும் மரங்களின் பெயரைப் பொருத்திக் கரும்பலகையில் எழுதவும் . அதன்பின் பனம்பழத்தின் நிழற்படத்தை மாணவர்களிடம் காண்பித்துப் பின் உரையாடலைத் தொடரவும்)</u>***

***<u>கரும்பலகையில் :</u>***

| பழத்தின் பெயர் | மரத்தின் பெயர் |
|---|---|
| மாம்பழம் | மாமரம் |
| வாழைப்பழம் | வாழைமரம் |
| கொய்யாப்பழம் | கொய்யாமரம் |
| நாவற்பழம் | நாவல் மரம் |

**வாசித்தல் :**

மாணவர்களுடன் உரையாடிப் பெற்ற சொற்களை /சொற்றொடர்களை கரும்பலகையில் எழுதிய பின் மாணவர்களை வாசிக்கச் செய்யவும். தனி வாசிப்பு முறை, குழு வாசிப்பு முறை எனப் பல்வேறு வாசிப்பு முறைகளைப் பின்பற்றவும். மாணவர்களுக்குத் தேவையான வாசிப்பு உதவிகளை ஆசிரியர் செய்யவும்.

**பாட அறிமுகம் : ஆசிரியர் - மாணவர் இடைவினை**



**ஆசிரியர்** : இது என்ன பழம் ?

**மாணவர்கள்** : தெரியவில்லை (அ) பனம்பழம்.

***(மாணவர்களால் பனம்பழத்தை அடையாளம் காண முடியாத சூழலில், பனை நுங்குடன் பனம் பழமுள்ள படத்தை ஆசிரியர் காண்பித்து உரையாடலைத் தொடரவும்)***



**ஆசிரியர்கள்** : இப்பொழுது சொல்லுங்கள் , இது என்ன பழம்?

**மாணவர்கள்** : நுங்குப் பழம் / பனம்பழம்

**ஆசிரியர்** : இந்தப் பழத்தைச் சாப்பிட்டுள்ளீர்களா?

**மாணவர்கள்** : இல்லை ( ஆம் என்று மாணவர் பதில் கூறினால், பழத்தின் சுவையைப் பற்றி அந்த மாணவரை விவரிக்கச் சொல்லவும் )

**ஆசிரியர்** : பனம்பழம் எந்த மரத்தில் இருந்து கிடைக்கிறது ?

**மாணவர்கள்** : நுங்கு மரம்/பனை மரம்.

**ஆசிரியர்** : சரி. பனம் பழம் பனை மரத்தில் இருந்து கிடைக்கிறது. பனைமரம் சிறப்புகள் வாய்ந்த ஒரு மரம். பனைமரத்தில் இருந்து பல்வேறு பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. அந்தப் பொருட்கள் எவை ? சொல்லுங்கள் பார்ப்போம்...

**மாணவர்கள்** : நுங்கு, பனம்பழம், பிற...

***(ஆசிரியர் பின்வரும் படத்தை மாணவர்கள் அனைவரும் பார்க்கும் வண்ணம் காட்டி படத்தில் உள்ள ஒவ்வொரு பனைப் பொருளின் பெயரையும், அவற்றின் பயன்பாட்டையும் மாணவர்கள் எளிதாக விளங்கிக் கொள்ளும் வண்ணம் விளக்கவேண்டும். எளிய கேள்வி பதில்கள் மூலம் கற்பிக்க வேண்டும்.***

***பனைப்பொருள்களையோ (அ ) பனைப்பொருள் மாதிரிகளையோ வகுப்பிற்கு எடுத்துச் சென்று காண்பித்தும் கேள்விகளைக் கேட்கலாம். )***

பனைமரத்தின் பாகங்களையும் பயன்களையும் எடுத்துக்காட்டி விளக்குதல் :



ஆசிரியர் – மாணவர் இடைவினைக்கான கேள்விகள் :

இதை நீங்கள் பார்த்துள்ளீர்களா ?

இதை நீங்கள் உண்டுள்ளீர்களா ?

இதன் பெயர் என்ன ?

இது உங்களுக்குப் பிடிக்குமா ?

இது சுவையாக இருக்குமா ?

பனை மரத்தின் எந்தப் பாகத்தில் இருந்து இது கிடைக்கிறது ?

இது உணவுப் பொருளா?

இதன் பயன் என்ன ?

பனை ஓலையை வைத்து விளையாடி இருக்கிறீர்களா?

இந்த வண்டியை நீங்கள் ஓட்டி இருக்கிறீர்களா?



***(ஒவ்வொரு பனைப்பொருளின் பெயரையும், அது பனை மரத்தின் எந்தப் பாகத்தில் இருந்து கிடைக்கிறது என்பதையும் கேள்வி - பதில்கள் மூலம் கேட்டு மாணவர்களின் பதில்களை உடனுக்குடன் கரும்பலகையில் எழுதவும். மாணவர்களின் பதில்களை மறுமுறை ஒரு முறை உடனே கூறிவிட்டுப் பின் கரும்பலகையில் எழுதவும். )***

*கரும்பலகையில் :*

| பனைப்பொருள் | மரத்தின் பாகம் | பயன் |
|---|---|---|
| விசிறி | பனை ஓலை | காற்றாடியாகப் பயன்படுகிறது |
| முறம் | பனை ஓலை | தானியங்களைச் சலிக்கப் பயன்படுகிறது |
| பனங்கிழங்கு | பனைவிதை | உணவுப்பொருள் |
| பனைப்பாய் | பனை ஓலை | படுக்கை |
| கைவினைப் பொருள்கள் | பனை ஓலை | கலை / அழகுப் பொருள் |

வாசித்தல் :

மாணவர்களுடன் உரையாடிப் பெற்ற சொற்களை /சொற்றொடர்களை கரும்பலகையில் எழுதிய பின் மாணவர்களை வாசிக்கச் செய்யவும். தனி வாசிப்பு முறை, குழு வாசிப்பு முறை எனப் பல்வேறு வாசிப்பு முறைகளைப் பின்பற்றவும் மாணவர்களுக்குத் தேவையான வாசிப்பு உதவிகளை ஆசிரியர் செய்யவும்.

**ஆசிரியர்** : இவ்வாறாகப் பனைமரத்தின் பாகங்கள் அனைத்தும் பலவகைகளிலும் பயன்படுகிறது, அதனால் பனைமரம் ' கற்பகத்தரு' என அழைக்கப்படுகிறது. பனைமரத்தின் வேர் நிலத்தடி நீரைச் சேமித்து வைத்து நிலத்தடி நீர் உயரக் காரணமாக அமைகிறது.

நீங்கள் இந்தப் பறவைகளைப் பார்த்தது உண்டா ?

(பனங்காடை, பனை உழவாரன் ஆகிய பறவைகளின் நிழற்படங்களைக் காண்பிக்கவும்)



பனங்காடை



பனை உழவாரன்

**ஆசிரியர்:** பனங்காடை , பனை உழவாரன் இவை இரண்டும் பனை மரத்தில் வாழும் பறவைகள். ஆனால் பனை மரங்கள் எரி பொருளுக்காகவும், மர வேலைகளுக்காகவும் தொடர்ந்து வெட்டப்படுகின்றன. மரங்கள் இல்லாமல் மனிதர்களும், பிற உயிர்களும்

வாழமுடியாது. பனைமரங்களையும் பறவைகளையும் பாதுகாக்க வேண்டியது நமது கடமை.

நீங்கள் பள்ளியில்/வீட்டுக்கு அருகில் உள்ள மரங்களில் பறவைகளைப் பார்த்தது உண்டா ? என்னென்ன பறவைகளைப் பார்த்துள்ளீர்கள்?

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்தப் பனைமரம் தமிழ்நாட்டு அரசின் மாநில மரமாகும்.

புதுச்சேரி அரசின் மாநில மரம் என்னவென்று தெரியுமா ?

***(பாடப்புத்தகத்தில் உள்ள தமிழ்நாட்டின் சின்னங்களை மாணவர்கள் பார்க்கச் செய்தல், பின் பாண்டிச்சேரி அரசின் மாநிலச் சின்னங்களை அறிமுகப்படுத்துதல்)***

அணிலைப் பார்த்துள்ளீர்களா ?

குயிலைப் பார்த்துள்ளீர்களா? குயிலின் பாடலைக் கேட்டுள்ளீர்களா?

நாகலிங்கப் பூவைப் பார்த்துள்ளீர்களா ?

வில்வ மரத்தைப் பார்த்துள்ளீர்களா ?

மதிப்பீடு :

1. பனைமரத்தின் பாகங்கள் யாவை ?
2. பனைமரத்தினால் நாம் அடையும் பயன்கள் யாவை ?
3. பனைமரத்தில் காணப்படும் பறவைகள் யாவை ?
4. பனங்கிழங்கு பனைமரத்தின் எந்தப் பாகத்தில் இருந்து கிடைக்கிறது?
5. பனைமரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப்பொருள்கள் யாவை ?

தொடர்பணி :

பனை மரம் குறித்தும், பனை பொருட்கள் குறித்தும், மாணவர்களைப் பெரியவர்களிடம் உரையாடச் செய்யவேண்டும். மேலும் அன்றாட வாழ்வில் மரங்களின் முக்கியத்துவம் குறித்து பெரியவர்கள் மூலமும், நூலகம் மூலமும் அறிந்துகொள்ள மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

பனைமரச் சிறப்புகள் : மேலதிகத் தகவல்கள்

| இணைய இணைப்பு | QR இணைப்பு |
|---|---|
| https://www.youtube.com/watch?v=SmK9IzUeCjc | |
| https://www.youtube.com/watch?v=CuWcWl-OoD4 | |
| https://www.youtube.com/watch?v=e6xofCUy1Os | |
| https://www.youtube.com/watch?v=96WarWHzxtk | |
| http://kungumam.co.in/APArticalinnerdetail.aspx?id=2219&id1=50&id2=18&issue=20140930 | |
| https://www.maalaimalar.com/health/arokiyamtopnews/2017/02/27093909/1070654/pana-kilangu-medical-benefits.vpf | |